'டம்மி' முதல்வர் ஆட்சியில் தேனியைத் தொடர்ந்து

நெல்லை, குமரியிலும் 5 சப்-இன்ஸ்பெக்டர்களை வெட்டிக் கொல்ல முயற்சி!

செயலற்றுக் கிடக்கும் காவல்துறை!

நாகர்கோவில், நவ. 12- குமரி, நெல்லை மாவட்டத்தில் போலீ சுக்கே மிரட்டல் விடுக் கும் வகையில் ரவுடிகள் அட்டகாசம் பெருகியுள் ளது. ரவுடிகளை வேட் டையாடச் சென்ற 5 எஸ்.ஐ.க்களை அரிவா ளால் வெட்ட முயற்சி நடந்துள்ளது. தமிழ்நாடு மு ழு வ து ம் தீபாவளியையொட்டி தேனி சிறப்பு சப்இன்ஸ் பெக்டர் உள்பட 17 பேர் படுகொலை செய்யப்பட் டுள்ளனர். மது மற்றும் கஞ்சா போதையில் கொலைகள் நடந்துள் ளன. கொலை செய்தவர் களில் பெரும்பாலானவர் கள் ரவுடிகள் பட்டியலில் உள்ளவர்கள் ஆவர்.

இந்த சம்பவங்களை தொடர்ந்து ரவுடிகள் பட் டியலில் உள்ளவர்களை கைது செய்யும் நடவடிக் கைகள் தீவிரமாகின. அதன்படி நேற்று முன்தி னம் தமிழ்நாடு முழுவ தும் ரவுடிகள் வேட்டை நடந்தது. குமரி மாவட் டத்திலும் ரவுடிகள் வேட்டை நடைபெற் றது. ரவுடிகள் பட்டிய லில் உள்ளவர்களை போலீசார் கைது செய்ய சென்றபோது போலீசா ரையே மிரட்டும் அள வுக்கு 5 இடங்களில் எஸ்.ஐ.களை அரிவாளால் வெட்ட முயற்சி நடந் துள்ளது.

★ குமரி மாவட்டம், ராஜாக்கமங்கலம் அருகே எஸ்.ஐ. பென்சன் தலை மையில் போலீசார் ரோந்து பணியில் இருந்த போது, வடலிவிளை சாந் தபுரத்தை சேர்ந்த அருள் (27), பருத்திவிளை பகு தியை சேர்ந்த பாபு (36) ஆகியோர் சாக்கு பையு டன், தனியார் மண்டபம் அருகே நின்று கொண்டி ருந்தனர். அவர்களிடம் போலீசார் விசாரணை நடத்திய போது, திடீ ரென பையில் இருந்த அரி வாளை எடுத்து எஸ்.ஐ. பென்சனை வெட்ட முயன்றதாக கூறப்படு கி றது. இதில் எஸ்.ஐ. மற் றும் போலீசார் தப்பினர். இதையடுத்து அருள், பாபு இருவரையும் போலீ சார் கைது செய்தனர். இவர்கள் காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்ற வாளிகள் பட்டியலில் உள்ளனர்.

★ தென்தாமரைக்கு ளம் அருகே உள்ள முகி லன் குடியிருப்பு சந்திப்பு பகுதியில் எஸ்.ஐ. சுரேஷ் தலைமையில் போலீசார் ரோந்து பணியில் இருந்த போது, நடுரோட்டில் அரி வாளை தேய்த்தபடி சென்று பொதுமக்களை அச்சுறுத்தியதாக முகிலன் குடியிருப்பு பகுதியை சேர்ந்த பாலஸ்ரீராமச்சந்தி ரன் என்ற கண்ணன் (33), அ க ஸ் தீ ஸ் வ ர த் தை சேர்ந்த முத்து என்ற முத் துக்குமார் (38) ஆகி யோரை கைது செய்ய சென்றனர். அப்போது அவர்கள் போலீசாரிட மும் அரிவாளை காட்டி மிரட்டி தப்ப முயன்ற னர். அவர்களை போலீ சார் சுற்றிவளைத்து பிடித் தனர். இவர்கள் இருவரும் குற்றவாளிகள் சரித்திர பதிவேடு பட்டியலில் உள்ளனர்.

★ அஞ்சுகிராமம் காவல் நிலைய சப் இன்ஸ் பெக்டர் பிரிய ராஜ் குமார் தலைமையிலான போலீசார் ரஸ்தாகாடு சந்திப்பு பகுதியில் ரோந்து சென்றனர். அப்போது வட்டக்கோட்டையைச் சேர்ந்த பெலிக்ஸ், பால்கு ளம் அடுக்குமாடி குடியி ருப்பை சேர்ந்த சுரேந்தர், ஆமணக்கன்விளையைச் சேர்ந்த நந்தகோபால் ஆகியோர் அந்த பகுதி யில் நின்று கொண்டிருந் தனர். அவர்களை கலைந்து போகுமாறு எஸ்.ஐ. பிரிய ராஜ்குமார் கூறினார்.

அப்போது அவர்கள், நீ உயிரோடு இருந்தால் தானே எங்கள் வீட்டுக்கு சோதனை செய்ய வரு வாய் என கூறி, அரி வாளை எடுத்து எஸ்.ஐ. பிரிய ராஜ்குமாரை வெட்ட முயன்றனர். இதில் அவர் உயிர் தப்பி னார். அஞ்சுகிராமம் போலீசார் வழக்கு பதிந்து 3 பேரையும் கைது செய் தனர். இவர்கள் மீது ஏற்க னவே வழக்குகள் உள் ளன.

★ சுசீந்திரம் சப் இன்ஸ் பெக்டர் கல்யாணசுந்த ரம், நேற்று முன்தினம் மாலை பறக்கை காடேற்றி குளம் அருகே ரோந்து பணியில் இருந்த போது, அந்த வழியாக புத்தளம் அரிய பெரு மாள் விளையை சேர்ந்த தனபாலன் (23) என்பவர் சாக்கு பையுடன் வந்தார். அவரை தடுத்து நிறுத்தி விசாரித்த போது, அரி வாளை எடுத்து எஸ்.ஐ. கல்யாண சுந்தரத்தை வெட்ட முயன்றுள்ளார். இதில் எஸ்.ஐ. தப்பினார். இது குறித்து சுசீந்திரம் போலீசார் தனபாலன் மீது வழக்கு பதிந்து கைது செய்தனர்.

★ நெல்லை அருகே தாழையூத்து காவல் நிலைய எஸ்.ஐ சுதன் மற் றும் சிறப்பு எஸ்.ஐ சந்தி ரன் உள்ளிட்ட போலீ சார் தீபாவளி பண்டி கையை ஒட்டி தீவிர ரோந்துப் பணியில் ஈடு பட்டனர். தாழையூத்து ரயில்வே கேட் அருகில் இரவு நேரத்தில் போலீ சார் சென்றபோது, அங்கு சந்தேகத்திற்கு இடமான வகையில் 4 பேர் நின்றி ருந்தனர். உடனே போலீ சார் அவர்களிடம் சென்று விசாரித்துள்ளனர்.

அப்போது அவர்கள் முன்னுக்குப் பின் முர ணாக பதில் அளித்தனர். திடீரென அந்த 4 பேரும் சேர்ந்து போலீசாரை திட்டி கொலைமிரட்டல் விடுத்தனர். தொடர்ந்து அக்கும்பலில் ஒருவரான தாழையூத்து ஸ்ரீநகர் மின் நகரை சேர்ந்த செல்வ ராஜா (19) என்பவர் திடீ ரென தான் மறைத்து வைத்திருந்த அரிவாளால் ச ப் இ ன் ஸ் பெ க் ட ர் சுதனை வெட்ட முயன் றார். ஆனால் அவர் வில கிக் கொண்டதால் தப்பி னார். பின்னர் அந்த கும்பல் அங்கிருந்து தப் பிச்சென்றது. இதுகுறித்து தாழையூத்து போலீசார் வழக்குப்பதிந்து செல்வ ராஜாவை கைது செய்த னர். மற்ற 3 பேரையும் தேடி வருகின்றனர்.

அந்துமணி சிந்துமணி



அந்துமணி : ஏண்டி சிந்து; 'த.வெ.க. ஆட்சியில் ஊழலே இல்லை; த.வெ.க. ஆட்சியை கலைக்க சதி நடக்குதுன்னு', த.வெ.க. தலைவர் - சாரி - மாநில காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாக்கூர் சொல்லி இருக்காரே! தெரியுமா?

சிந்துமணி : ஆமாண்டி அந்து; **தி.மு.க.வுடன் காங்கிரஸ் கூட்டணியில் இருந்தபோதே த.வெ.க.வுடன் மறைமுகத் தொடர்பில் இருந்தவர்களில் அவரும் ஒருத்தர் தானே! அப்படித்தான் சொல்லுவார். எப்படியோ அவருக்கு 'காரியம்' ஆனா சரி!**

போர்களத்தில் இருந்து பயந்து ஓட்டம்!

66 ராணுவ வீரர்களுக்கு மரண தண்டனை – காங்கோ அரசு அறிவிப்பு!

காங்கோ, நவ.12 - 2025 ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து தற் போதுவரை 381 பேருக்கு மரண தண்டனை விதிக்கப் பட்டுள்ளது!

காங்கோ ஜனநாயகக் குடியரசில், பயம் மற்றும் உத்தரவுகளுக்கு கீழ்ப்படிய மறுத்த குற்றங்களுக்காகக் குறைந்தது 66 வீரர்களுக்கு ராணுவ நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ள தாக, அந்நாட்டு ஊடகங் கள் செய்திகள் வெளியிட் டுள்ளன.

கிழக்கு காங்கோவில் உள்ள வடக்கு கிவு மாகா ணத்தின் வாலிகாலேவில் அமைந்துள்ள ராணுவ நீதி மன்றத்தில் 71 வீரர்களிடம் நடத்தப்பட்ட விசார ணையைத் தொடர்ந்து, 66 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நான்கு வீரர்கள் விடுவிக் கப்பட்ட நிலையில், மற் றொருவருக்கு 10 ஆண்டு கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

ஆயுதக் குழுக்களுடன் போரிடும் வீரர்களிடையே ஒழுக்கத்தை மேம்படுத்து வதே இதன் நோக்கம் என ராணுவம் தெரிவித்துள்ளது.

காங்கோ அரசுப் படைக ளுக்கும், மார்ச் 23 இயக் கத்தை உள்ளடக்கிய *FRN (Front for the Refoundation of the Nation)* குழுவிற்கும் இடையே தொடர்ந்து மோதல் நடைபெற்று வரு கிறது.

இந்நிலையில் இவர்களு டனான மோதலின்போது, தங்கள் நிலைகளைக் கை விட்டுத் தப்பி ஓடியதாக, தற்போது தண்டனை விதிக் கப்பட்டுள்ள வீரர்கள் அக்.20 அன்று கைது செய் யப்பட்டனர்.

கடந்த மாதமும், கிளர்ச் சி யா ள ர் க ளு ட ன ான மோதல்களின்போது முன் னணிப் பகுதியிலிருந்து பின்வாங்கியதாகக் கூறப் பட்ட தைத் தொடர்ந்து, கோழைத்தனம் உள்ளிட்ட இதேபோன்ற குற்றச் சாட்டுகளின் பேரில் 27 வீரர்களுக்கு மரண தண் டனை விதிக்கப்பட்டது.

வீரர்களிடையே நிலவும் பொறுப்பின்மை, பயம் மற் றும் ஒழுக்கமின்மையால், ஆயுதக் குழுக்களுக்கு எதி ரான ராணுவ நடவடிக்கை கள் பலவீனமாக இருப்ப தாக கூறப்படுகிறது.

இதனால் அந்நாட்டு ராணுவம் தொடர்ந்து விமர்சனங்களைப் பெற்று வரும்நிலையில், குறைந்த ஊதியம் மற்றும் போதிய பாதுகாப்பு உபகரணங்கள் இல்லை என வீரர்கள் குற் றம் சாட்டுகின்றனர்.

மரண தண்டனை

கடந்த 2024 மார்ச் மாதம், மரண தண்டனை மீதான 20 ஆண்டு கால தடையை காங்கோ குடிய ரசு நீக்கியது.

ஆயுதக் குழுக்கள், கிளர்ச்சி ஆகியவற்றில் ஈடு படுவோர், அத்துடன் தேசத்துரோகம் மற்றும் போர்க்குற்றங்களில் ஈடுப டுவோ ருக்கும் மரண தண் டனை விதிக்கப்படும் என தெரிவித்தது.

மரண தண்டனையை மீண்டும் அமல்படுத்தும் முடிவு, மனித உரிமை அமைப்புகளால் கடுமை யாக விமர்சிக்கப்பட்டது. இருப்பினும் இதுவரை எந்த மரண தண்டனையும் நிறைவேற்றப்படவில்லை.

பிரெஞ்சு ஒளிபரப்பு நிறு வனமான *RFI* தொகுத்த புள்ளிவிவரங்களின்படி, 2025ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து தற் போதுவரை குறைந்தது 507 வீரர்கள் குற்றவாளி களாக அறிவிக்கப்பட்டுள்ளனர், இதில் 381 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட் டுள்ளது.

ஆயுதக் கிளர்ச்சிக் குழு

FRN (Front for the Refoundation of the Nation) என் பது காங்கோ ஜனநாயகக் குடியரசின் கிழக்குப் பகுதி யில் செயல்பட்டு வரும் ஒரு புதிய கூட்டணி ஆயு தக் கிளர்ச்சிக் குழுவாகும்.

இது முன்பு பரவலாக அறியப்பட்ட *M23* கிளர்ச் சிக் குழு உள்ளிட்டவற்றின் மறுவடிவமாக, பல கிளர்ச் சிக் குழுக்களை ஒன்றி ணைத்து உருவாக்கப் பட்டுள்ளது.

தற்போதைய காங்கோ அரசாங்கத்தை வீழ்த்து வதே இக்குழுவின் முக்கிய நோக்கமாக அறிவிக்கப் பட்டுள்ளது.

இந்த *FRN* குழுவின் தலைவராக காங்கோவின் முன்னாள் அதிபர் ஜோசப் கபிலா நியமிக்கப்பட்டுள் ளது குறிப்பிடத்தக்கது.

தமிழக 'வெற்றி' பயணத்தால்

தினசரி ரூ.20 கோடி நஷ்டம்! சீரழியும் போக்குவரத்துத் துறை!

தொழிலாளர்கள் அச்சம்!

சென்னை, நவ. 12 -

தமிழக வெற்றிப் பயணத்தால் அரசு போக்குவரத்து கழகங்கள் நஷ்டத்தை சந்திக்க துவங்கி யுள்ளன. இது போக்குவரத்துத் தொழிலாளர்களிடம் பயத்தையும், கவலை யையும் அதிகரித்துள்ளது.

தமிழ்நாட்டில் விழுப்புரம், கும்ப கோணம், மதுரை, கோவை, சேலம், திருநெல்வேலி என மொத் தம் 6 போக்குவரத்து மண்டலங் கள், மாநில விரைவு போக்குவரத்து கழகம், சென்னை மாநகர போக்கு வரத்து கழகம் என 8 பிரிவுகள் உள் ளன. தினசரி 19,283 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. அதில் சராசரி யாக 1 கோடி பயணிகள் பயணம் செய்துவருகின்றனர். இதன்மூலம் சுமார் 50 கோடி ரூபாய் வருவாய் வந்துகொண்டிருந்தது.

கடந்த தி.மு.க. ஆட்சிக்காலத்தில் விடியல் பயணம் என்கிற பெயரில் மாநகர, நகர மற்றும் கிராமப்புற பேருந்துகள் என 7714 பேருந்துக ளில் மட்டும் கட்டணமில்லாமல் பெண்கள் பயணம் செய்தனர். த.வெ.க. ஆட்சி அமைந்த பின்னர் 'வெற்றிப் பயணம்' திட்டத்தில், தொலைதூர, சொகுசு, ஏசி பேருந்து கள் தவிர மீதியுள்ள 12,695 பேருந்துகளில் பெண்களுக்கு இல வச பயணம் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

பெண்களுக்கான இலவச பய ணத்தை நடைமுறைப்படுத்தும் முன்பு மாணவர்களுக்கு, மாற்றுத் திறனாளிகளுக்கு, மூத்த குடிமக் களுக்கான இலவச பயணத் திட்டம் மட்டும் நடைமுறையில் இருந்தன. அப்போது போக்குவரத்து கழகத் தின் தினசரி வருவாய் 45 முதல் 47 கோடி வரை இருந்தன. பெண்க ளுக்கான இல வசப் பயணம் நடை முறைப்படுத்திய போது போக்குவ ரத்து கழகங்கள் பெரும் நட்டத்தை சந்தித்தன. அதனால் நட்டத்தை ஈடுகட்டும் வகையில் அரசின் சார் பில் தினசரி மானியமாக 25 கோடி ரூபாய் போக்கு வரத்து கழகத்துக்கு தரப்பட்டது. இருந்தும் தினசரி 10 கோடி வரை நட்டத்தை சந்தித் துள்ளன.

த.வெ.க. ஆட்சியில் வெற்றிப் பய ணம் நடைமுறைப்படுத்திய பின் னர் தினசரி வருவாய் அதிகபட்சம் 9 கோடி வரை வருகிறதாம். பெரும்பா லும் 7 கோடியை தாண்டுவதில்லை யாம். இதனால் தினசரி நட்டம் 40 கோடி யாகிவிட்டது. த.வெ.க. அரசு சார்பில் போக்குவரத்து கழகங்க ளுக்கு தி.மு.க. ஆட்சியில் தரப்பட்ட அதே 25 கோடி தான் மானியமாக தரப்படுகிறதாம். இதனால் தினசரி 20 கோடி வரை நட்டத்தில் போக்கு வரத்துக் கழகங்கள் பேருந்துகளை இயக்கிவருகின்றன.

பேருந்துகள் குறைப்பு!

அரசு போக்குவரத்துக் கழகம் தினசரி இயங்க சுமார் 19 கோடி ரூபாய் செலவாகிறது. அதில் டீசல் மட்டும் 16.17 கோடிக்கு வாங்கப்படு கிறது. பேருந்துகள் பராமரிப்புக்காக 2.35 கோடி செலவிடப்படுகிறது. இப்போது தினசரி செலவுகளுக்கு கூட டிக்கெட் வழியாக வருமானம் வரவில்லை என்கிறார்கள். இதனா லேயே மண்டலங்கள் அளவில் வருவாய் இல்லாத வழித்தடங்க ளில் வாரத்தில் 3 நாட்கள், 4 நாட்கள் பேருந்துகள் இயக்குவது நிறுத்தப்பட்டன. விழுப்புரம் கோட் டத்தில் மாவட்ட அளவில் தி.மலை யில் 34, கடலூரில் 28, விழுப்புரம், கள்ளக்குறிச்சியில் 26 பேருந்துகள், வேலூர் 23, காஞ்சிபுரம் 15, திரு வள்ளூர் 10 பேருந்துகள் என 136 பேருந்துகள் செவ்வாய், புதன், வியாழன் ஆகிய நாட்களில் இயக் குவது நிறுத்தப்பட்டது.

கடும் விமர்சனத்துக்கு பின்னர் மீண்டும் அந்த பேருந்துகள் இயக் கப்படுகின்றன என்கிறார்கள் விழுப் புரம் மண்டல அதிகாரிகள். அதே நேரத்தில் சத்தமில்லாமல் பேருந்து கள் குறைக்கப்பட்டதோடு, குறுகிய தூர பேருந்துகள் தொலைதூர பேருந்துகளாக மாற்றப் பட்டுள்ளன என்கிறார்கள்.

மானியத்தொகை வழங்கப்படவில்லை!

இதுகுறித்து தொழிலாளர் முன் னேற்ற சங்கத்தின் மாநில துணைத் தலைவர்களில் ஒருவரான சௌந் தர்ராஜனிடம் கேட்டபோது, "போக்கு வரத்துக் கழகத்தில் சுமார் 1 லட்சம் பணியாளர்கள் பணியாற்றுகிறார் கள். தி.மு.க. ஆட்சியில் விடியல் பயண திட்டம் அறிமுகப்படுத்தும் போதே தோராய கணக்கிட்டு ஆண்டுக்கு 1200 கோடி நிதியை எங்களுக்கு தந்தது அரசு. அதன் பின் 3 மாதத்துக்கு ஒருமுறை நிதி தந்துவந்தது. அந்த நிதியை வைத்து அப்போது புதிய பேருந்துகள் வாங் கப்பட்டது. இப்போது த.வெ.க. ஆட்சி யில் வெற்றிப் பயணம் திட்டத் துக்கு, இதுவரை 3 மாதத்துக்கு ஒரு முறை தரவேண்டிய மானியத் தொகையைக்கூட அரசு வழங்க வில்லை.

தொழிலாளர்கள் புலம்பல்!

பெரும்பாலும் ஒப்பந்த பணியா ளர்களை வைத்து போக்குவரத்துக் கழகம் இயங்கிவருகிறது. டெக்னிக் கல் ஊழியர்கள் கிடையாது. டீசல் தரும் நிறுவனங்களுக்கு பணம் தரவில்லை. பேருந்துகளுக்கு டயர் வாங்கிப்போட பணமில்லை என்ப தால் ரீட்ரேடிங் டயர் போட்டு பேருந்தை ஓட்டச்சொல் கிறார்கள். ரீட்ரேடிங் டயர்களை பயன்படுத்தி னால் பெரும் விபத்துகள் ஏற்படும் எனச் சொன்னாலும் கேட்பதில்லை. தொழிலாளர் சங்கங்களிடம், தொழிலாளர்கள் பிரச்சினைகள், குறித்து எதுவும் கலந்து ஆலோ சனை செய்வதில்லை. அமைச்சர் விஜய் தமிழன்பார்த்திபன் ஆய்வு செய்யவில்லை. எங்கள் பிரச் சினையை யாரிடம் போய் சொல்வது எனத்தெரியாமல் இருக் கிறோம்" என்றார்.

வங்கக் கடலில் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாகிறது!

சென்னை, நவ. 12 - தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் புதிய காற்றழுத் தத் தாழ்வுப் பகுதி நாளை (13ஆம் தேதி) உருவாக வாய்ப்பு இருக்கிறது. இது படிப்படியாக வலுவடைந்து தாழ்வு மண்டலமாக வருகிற 15ஆம் தேதி இலங்கையை யொட்டிய வங்கக்கடல் பகு திக்கு வந்து நிற்க வாய்ப்பு இருக்கிறது. அதன் பின்னர் மேலும் வலுப்பெற்று தமிழ கக் கடற்கரைப் பகுதிகளை நோக்கி நகரக்கூடும்.

புயலாகவும் மாற வாய்ப்பு உள்ளது. இது தமி ழகத்தை நோக்கி வருகிறது. இதனால் தமிழ்நாட்டில் வரு கிற 15ஆம் தேதியில் இருந்து மழைக்கான சூழல் அதிகரித் துள்ளது. 20ஆம் தேதி வரை தமிழ்நாட்டில் நல்ல மழை இருக்கும்.

புயலாக மாறும் பட்சத் தில் அது தமிழகப் பகுதிக ளில் 19ஆம் தேதியோ, அதற் கடுத்த நாட்களிலோ கரை யைக் கடக்க வாய்ப்பு இருக் கிறது. அண்மையில் அடுத் தடுத்து இரண்டு புயல்கள் குறுகிய காலத்தில் உருவான தால், முதல் புயல் கரையைக் கடந்ததும் கடலுக்குச் சென்ற சென்னை காசிமேடு மீனவர்கள் இரண்டாவது புயலில் சிக்கிக்கொண்டனர். இதில் த.வெ.க. அரசின் அலட்சியத்தால் 9 மீனவர் கள் உயிரிழந்தனர். எனவே மீனவர்கள் எவரும் இன்று முதல் மீன்பிடிக்க கடலுக் குச் செல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.



கீழ்பெண்ணாத்தூர் காமராஜர் நகரைச் சேர்ந்த சேகர் – மகேஸ்வரி ஆகியோரின் மகள் வள்ளியம்மாள் (பள்ளி மாணவி வயது 15) சமுத்திரம் ஏரியில் குளிக்கச் சென்ற போது ஏரியில் மூழ்கி இறந்தார். அவரது உடலுக்கு சட்டமன்ற முன்னாள் துணை தலைவர் கு.பிச்சாண்டி மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். உடன் ஒன்றிய செயலாளர் ஆராஞ்சி ஆறுமுகம், பேரூராட்சி தலைவர் சரவணன், பேரூராட்சி உறுப்பினர் மணி, கீழ்பெண்ணாத்தூர் இளைஞர் அணி அமைப்பாளர் வினோத்குமார் மற்றும் கழக உடன்பிறப்புகள் நேரில் அஞ்சலி செலுத்தினார்கள்.



அண்மையில் மறைந்த முன்னாள் ஒரத்தநாடு சட்டமன்ற உறுப்பினர் எம்.ராமச்சந்திரன் அவர்களின் இல்லம் சென்று அவரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, குடும்பத்தினருக்கு கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. ஆறுதல் கூறினார். உடன் தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை. சந்திரசேகரன் எம்.எல்.ஏ., தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச. முரசொலி, பெரம்பலூர் மாவட்டப் பொறுப்பாளர் ஜெகதீசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் து.செல்வம், மேயர் திருமதி அஞ்சுகம் பூபதி, ஒன்றியக் கழகச் செயலாளர் செல்வகுமார், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் பொறியாளர் ஆர்.பி.பரமேஸ்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.இராஜேந்திரன், பெரம்பலூர் மாவட்ட துணைச் செயலாளர் டி.சி.பாஸ்கர் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.